පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය: 290

ආයතනයේ නම: කර්මාන්ත අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர்: கைத்தொழில் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் நிறுவன கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 290

Name of the Institution: Ministry of Industries

Submission of observations of Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee On Public Accounts in terms of Standing Order No. 119(4)

ගරු අමාත්‍යතුමා
கௌரவஅமைச்சர்
Hon. Minister
011- 2435248
Fax : 011- 2390885

අමාත්‍යාංශය
அமைச்சு
Ministry
011- 2392149
011-2392150
Fax : 011-2390941

ලේකම්
செயலாளர்
Secretary
011-2436123
011-2436124
Fax : 011-2449402

විද්‍යුත් තැපෑල
மின்னஞ்சல்
E -mail
secretarymid@gmai

කර්මාන්ත අමාත්‍යාංශය
கைத்தொழில் அமைச்சு
MINISTRY OF INDUSTRIES

කැ.පෙ.570, 73/1, ගාලුපාර, කොළඹ 03, ශ්‍රී ලංකාව , த.பெ. இல.570,73/1,காலிவீதி,கொழும்பு 03, இலங்கை
P.O.Box 570, 73/1, Galle Road, Colombo 03, Sri Lanka

මගේ අංකය
எனது இல
My No: MIC/FIN/02/05/06

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date 2024.01.

அரச கணக்குக் குழுவினால் நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகளை சமர்ப்பித்தல்

பாராளுமன்ற அமர்வு இல: - இல. 290

நிறுவனத்தின் பெயர்: - கைத்தொழில் அமைச்சு

2021 ஆம் ஆண்டிற்கான அரச கணக்குக் குழுவால் கண்டறியப்பட்ட பலவீனங்கள்	அந்த பலவீனங்களை போக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய சூழ்நிலை
அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	குழாம் வாகனங்களில் அரச இலச்சினை பொறிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏனைய வாகனங்களில் அரச இலச்சினை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஒரு வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் 08 மாதங்களுக்கும் குறைவான காலத்தில் அப்புறப்படுத்தப்படவில்லை.	கொரோனா தொற்று காரணமாக, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வாகனங்களை அப்புறப்படுத்தும் பணி தாமதமானது. தற்போதைய நிலை பின்வருமாறு. 2022-2023 ஆம் ஆண்டுகளில் வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்ட வகையில், KW 8777 ஜீப் வாகனம் ரூ. 12,368,000/- க்கும் மற்றும் KY 3709 ஜீப் வாகனம் ரூ.13,989,989/- க்கும் அப்புறப்படுத்தியதன் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை அரசாங்க வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. KH 2765 அப்பறுப்படுத்துவதற்கு முன்வைத்த போதிலும், பெறப்பட்ட ஏலங்கள் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட குறைவாக இருந்ததால் விற்க முடியவில்லை. 2023 - 2024 வாகனங்களை நீக்கும் பணி நடைப்பெற்று வருவதோடு, அதற்காக மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 18 - 2230 வாகனத்தை அப்புறப்படுத்தும் நேரத்தில் கழிவு என அப்புறப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், அதிக ஏலம் எடுத்தவர் பணம் கொடுத்து வாகனத்தை எடுத்துச் செல்லவில்லை. பின்னர் இரண்டாவது அதிக ஏலம் எடுத்தவருக்கு வாகனத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அவரும் வாகனத்தை எடுக்கவில்லை.

	GA-8170 மற்றும் JN-3665 ஆகிய வாகனங்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கோரிக்கையின் பேரில் அங்கு கடமைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.
அரச வாகன விபத்துகள் குறித்து, நி.பி. 103, 104, 109 மற்றும் 110ன் படி முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	2019-2022 காலகட்டத்தில், கொரோனா தொற்று நிலைமை காரணமாக பல செயல்பாடுகள் முடங்கியுள்ளதோடு, மேலும் விபத்துக்கள் தொடர்பாக, நி.பி பரிசோதனையும் தாமதமானது. இதுவரை, பின்வரும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. CAE - 5402 - நி.பி. இன்படி ஒரு குழு நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது. காப்புறுதித் தொகையில் ஈடுசெய்யப்படாத தொகையான ரூ.114,000.00 பொறுப்பு அதிகாரியிடமிருந்து அறவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த தொகையை தவணை முறையில் செலுத்துவதற்கு உரிய உத்தியோகத்தர் கோரிக்கை விடுத்து, அதன்படி இதுவரை ரூ.35,000.00 செலுத்தப்பட்டுள்ளது. CAU-2005, KO-5818, KL-4080 மற்றும் KQ-6008 வாகனங்கள் தொடர்பாக, நி.பி. இன்படி குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக அது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
உரிய நேரத்தைக் கடந்து ஒதுக்கீடுகள் மற்ற நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.	குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னர் குறித்த வருடத்தில் குறிப்பிட்ட பணிகளை முறையாக செய்து முடிக்க முடியும் என சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் சம்மதித்துள்ளதால், குறிப்பிட்ட நேரத்தைக் கடந்து மற்ற நிறுவனங்களுக்கு ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வந்த கடன் நிலுவைகள் எஞ்சி இருந்தன.	சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களான திருமதி. டி.எம்.ஜி.பி.எம். ஷியாமலி 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வந்தபடியால் பிணையாளர்கள் இல்லை என்பதோடு, எனவே இந்த உத்தியோகத்தரின் கடன் நிலுவைத் தொகையான ரூ.78,750/-ஐ அறவிடுவது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. ஏ.எல்.எம்.மின்ஹார் மற்றும் எம்.எஸ்.என்.பி.டபிள்யூ.எம்.ஆர்.ஐ.ஏ. பண்டார என்பவர்களின் எஞ்சிய கடன்கள் மாதாந்தம் உத்தரவாததாரர்களிடமிருந்து தவணை முறையில் வசூலிக்கப்படுகிறது. இறந்த உத்தியோகத்தர்களான எஸ்.நிருதிகன் மற்றும் ஈ.ஜே.எம்.என்.எஸ்.ஏகநாயக்க ஆகியோரின் மரண பணிக்கொடையிலிருந்து முறையே ரூ.47,620.00 மற்றும் ரூ.148,600.00 கடன் நிலுவைகள் ஏற்கனவே அறவிடப்பட்டு நிறைவு செய்துள்ளதோடு, இறந்த உத்தியோகத்தர் டி.எம்.டி ரத்னசிறின் கடன் மிகுதியான ரூபா. 150,777.95 தொகையை மரண பணிக்கொடையின் மூலம் அறவிடுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட திரு.ஈ.கே.டி.பெர்னாண்டோவும் ஏற்கனவே மரணித்துள்ளதோடு, அவரை அண்டி வாழ்பவர்களுக்கும் செலுத்த முடியாத என தெரிவிக்கப்பட்டுள்ளதால், அவரது ரூபா. 100,208.00

	நிலுவைக் கடனை பதிவளிப்புச் செய்ய அரச நிதித் திணைக்களத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
பொது வைப்புக் கணக்கில் உள்ள காலாவதியான வைப்புகள் குறித்து, நி.பி. 571இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	கணக்குத் துறையின் பொது வைப்புத்தொகைகள் தொடர்பாக ஒரு லெட்ஜரைப் பராமரித்து வருவதோடு, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் எந்த நேரத்திலும் வெளியிடப்பட வேண்டிய வைப்புத்தொகை விவரங்களைக் கொண்டுள்ளது. இது தவிர, காலதாமதமான வைப்புகள் குறித்த பதிவேட்டை பராமரிக்க அபிவிருத்தி மற்றும் பிற துறைகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. 31.12.2022 அன்று ரூ. 20,279,073.00 தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புத் தொகையில், 2023 ஆம் ஆண்டில் ரூபா. 876,256.51 தொகையை அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ரூ. 2,141,832.99 தொகை செலுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. நி.பி. 571ன் பிரகாரம், காணி தொடர்பான் நிறுத்தி வைப்புகள் 10 ஆண்டுகள் வரை நிறுத்தி வைத்திருப்பது பிரச்சினை இல்லை என்பதோடு, எதிர்காலத்தில் திட்டப்பணிகள் நிறைவு செய்யப்படும் விதத்தில், சம்பந்தப்பட்ட துறைகளின் அறிவிப்புக்கு பின் விடுவிக்கப்பட வேண்டிய நிறுத்தி வைப்புத் தொகைக்கான மிகுதிகளை விடுவிக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்வேன்.
நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு கருத்து தகுதியற்றதாக அல்லது பாதகமாக இருந்தது.	கணக்காய்வாளர் நாயகம் 2021 நிதி ஆண்டுக்கான கணக்குகளை கணக்காய்வு செய்து, அதற்கான முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை கணக்கு தொடர்பாக வெளியிட்டுள்ளார். இங்கு சில விடயங்களுக்கு உட்பட்டு, நிதிநிலை அறிக்கைகள் உண்மை மற்றும் நியாயமானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இங்கு கூறப்பட்டுள்ளபடி, கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வுக் கருத்து தகுதியற்றது அல்லது பாதகமானது என்ற கருத்து சூழ்நிலையை சுட்டிக்காட்டவில்லை.
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வில்லை	2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள பெரும்பாலான பரிந்துரைகள், 2023 ஆம் ஆண்டளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு, சில பரிந்துரைகள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை தயவுடன் சுட்டிக்காட்டுகிறேன்.
உத்தியோகத்தர்களால் அரசுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நி.பி 156(1) இன் பிரகாரம் அறவீடுகள் செய்யப்படவில்லை.	சில இழப்புகள் வசூலிக்கப்பட்டு வருவதோடு, மேலும் சில இழப்புகளை வசூலிக்க சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஒப்பம்/டாக்டர் ரமேஷ் பத்திரண (பா.உ),
கைத்தொழில் அமைச்சர்.